தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் வேளாண் பல்கலையில் ஆய்வு**

தமிழ்நாடு அரசின் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்து, அதன் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலையில் செயல்பட்டு வரும் நெல் இனவிருத்தி மையம், நன்செய் நில ஆய்வு மையம், பழத்தோட்டம், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வணிக மேம்பாட்டு இயக்ககம், வளங்குன்றா அங்கக வேளாண்மை, பயிர் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம், தேனீ வளர்ப்பு கூடம், பயிர் மற்றும் எண்ணெய் வித்துக்கள் துறை போன்றவற்றை பார்வையிட்டு, அந்தந்த மையங்களில் நடைபெறும் ஆய்வுகள் குறித்து ஆர்வத்துடன் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடி அறிந்து கொண்டார்.

வேளாண் பல்கலையில் உள்ள ஆய்வு வசதிகள், படிப்புகள், உழவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், வேளாண் பல்கலையில் உள்ள தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வழிமுறைகள் குறித்தும் பேராசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

இந்தியாவிலேயே தனது செயல்பாடுகளால், முதன்மைப் பல்கலைக்கழகமாகத் திகழும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கு, அனைத்து விதமான உதவிகளையும் அரசு செய்யும் என்றும் கூறினார்.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள், பதிவாளர் முனைவர் கு.ரா. அனந்தகுமார் அவர்கள், ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. மகேஸ்வரன் ஆகியோர் ஆய்வின் போது உடனிருந்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்